**பேஸ் லைன் வீதி செயற்திட்டம் - கட்டம் III - 2014**

பேஸ் லைன் வீதி செயற்திட்டம் - கட்டம் III இன் 2014 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் மீதான கணக்காய்வு, இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியல் யாப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. இச் செயற்திட்டமானது 2009 நவம்பர் 19 இல் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் கீழ் அமுலாக்கப்படுகின்றது.

**1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கல், குறிக்கோள்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி என்பன**

நெடுஞ்சாலைகள முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சானது செயற்திட்டத்தின நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன், வீதி அபிவிருத்தி அதிகாரசபையானது செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது. கிருலப்பனையிலிருந்து கொழும்பு – ஹொரனை வீதியினை இணைக்கும் புதிய வீதியொன்றை நிர்மாணிப்பதன் மூலம் வீதிப் போக்குவரத்து நெரிசலினைக் குறைப்பதே செயற்திட்டத்தின் பிரதான நோக்கமாகும். செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட கிரயமானது ரூபா 719 மில்லியனானதுடன், செயற்திட்டத்தின் முழுக் கிரயமும் இலங்கை அரசினால் நிதியளிக்கப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது. செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் 2009 இல் ஆரம்பிக்கப்பட்டிருந்தன.

**1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

இந்நிதிக்கூற்றுக்களை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டு தத்துவங்களிற்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

**1.4 கணக்காய்வாளரின் பொறுப்பு**

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு

செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் நிகழ்சித்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி நிகழ்சித்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது.
எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன். அந்தப் பரிசோதனையில் பின்வருவனவற்றை மதிப்பீடு செய்வதற்கு அவசியமானதென தென்பட்ட செவ்வைகளும் உள்ளடக்கப்பட்டிருந்தன.

(அ) செயற்திட்ட முகாமைத்துவம் மீதான திருப்திகரமான கட்டுப்பாட்டையும், செயற்திட்ட தொழிற்பாடுகள் தொடர்பான, ஏடுகள், பதிவேடுகள் முதலியவற்றின் நம்பகத்தன்மையையும் நிச்சயப்படுத்துவதற்கேற்றவாறு உள்ளகக் கட்டுப்பாட்டின் நோக்கில் முறைமைகளும் கட்டுப்பாடுகளும் போதியளவில் இருந்தனவா என்பதும்,

(ஆ) செயற்திட்டத்தின் நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள செலவினங்கள் செயற்திட்டத்தால் பேணப்பட்ட நிதி அறிக்கைகள் மற்றும் செயன்முன்னேற்ற அறிக்கைகளுடன் திருப்திகரமாக இணங்குகின்றனவா என்பதும்,

(இ) இலங்கை அரசாங்கத்தினதும் நன்கொடையளிக்கும் முகவர்களிதும் நிதிகளிலிருந்தான செயற்திட்ட செலவினங்கள், நிதிசார் மற்றும் பௌதீக ரீதியில் செயற்திட்டத்தின் முன்னேற்றம், செயற்திட்ட தொழிற்பாடுகளிலிருந்து உருவாகிய சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள், மானியம் முதலியவற்றிலிருந்து மேற்கொள்ளப்பட்ட கொள்வனவுகளை இனங்காணுதல் என்பவற்றை தொடர்ச்சியான அடிப்படையில் காட்டும் வண்ணம் போதிய கணக்கீட்டுப் பதிவேடுகள் பேணப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஈ) செயற்திட்டத்தின் அமுலாக்கலுக்காகக் கடைபிடிக்கப்பட்ட வகைப்படுத்தலுக்கிணங்க செலவினங்கள் சரியாக இனங்காணப்பட்டிருந்தனவா என்பதும்,

(உ) நிதிக்கூற்றுக்கள் பொதுவாக ஏற்றுக்கொள்ளகப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களின் அடிப்படையில் தயாரிக்கப்பட்டிருந்தனவா என்பதும்,

(ஊ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான அளவீடுகள் எடுக்கப்பட்டிருந்தன என்பதும் ஆகும்.

## 1.5 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையில் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 அபிப்பிராயம்

எனது ஆய்வின் மூலம் தென்படுவதும் எனக்குக் கிடைக்கப்பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் எனக்கு வழங்கப்பட்ட விளக்கங்களுக்கு அமையவும்,

(அ) செயற்திட்டமானது 2014 திசெம்பர் 31 ஆண்டிற்காக முறையான கணக்கேடுகளை பேணியிருந்ததுடன் நிதிக் கூற்றுக்களானவை பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களிற்கு இணங்க 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செயற்திட்டத்தின் நிலவரத்தை உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்றும்,

(ஆ) ஏற்பாடு செய்யப்பட்ட நிதிகள் அவை ஏற்பாடு செய்யப்பட்ட நோக்கங்களுக்காகவே பயன்படுத்தப்பட்டிருந்தன என்றும்,

(இ) எனது முன்னைய ஆண்டு கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட விடயங்களை திருத்துவதற்கு முகாமைத்துவத்தால் திருப்திகரமான அளவீடுகள் எடுக்கப்பட்டிருந்தன என்றும்,

நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 2.2 கணக்கீட்டுக் கொள்கைகள்

செயற்திட்டத்தால் பிரயோகிக்கப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகள் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதி மற்றும் பௌதீக செயலாற்றல்

### 3.1 நிதிகளின் பயன்படு

நிதியளிப்பு, மீளாய்வான்டிற்கான பாதீட்டு ஏற்பாடு மற்றும் 2014 திசெம்பர் 31 வரையான மீளாய்வாண்டின் நிதிகளின் பயன்பாடு என்பன தொடர்பான முக்கிய புள்ளிவிபரங்கள் கீழே தரப்படுகின்றன.

| மூலம் | திருத்தப்பட்ட பாதீட்டு மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்ட ஒதுக்கீடு | நிதிகளின் பயன்பாடு | |
|---|---|---|---|
| | | மீளாய்வாண்டின் போது | 2013 திசெம்பர் 31 வரை |
| | ரூபா மில் | ரூபா மில் | ரூபா. மில் |
| இலங்கை அரசாங்கம் | 97.00 | 97.00 | 428.6 |
| | 97.00 | 97.00 | 428.6 |

### 3.2 பௌதீக முன்னேற்றம்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பேஸ்லைன் வீதியின் மேம்படுத்தலிற்காக அமுல்படுத்தப்பட்ட செயற்திட்டத்தின் பாகம் III இற்கான செயற்திட்ட நடவடிக்கைகள் 2009 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும், 2012 திசெம்பர் 31 இலிருந்து கொழும்பு – ஹொரணை வீதியின் கிருலப்பனையிலிருந்து துட்டகைமுனு சந்தி வரையான புதிய வீதியின் நிர்மாணத்தில் எதுவித முன்னேற்றமும் காணப்படவில்லை. காணி கொள்வனவில் காணப்பட்ட பிரச்சினையே இவ் வீதி நிர்மாணத்தில் ஏற்பட்ட காலதாமதத்திற்கு காரணம் என அவதானிக்கப்பட்டது. மேலும், செயற்திட்டமானது காணி கொள்வனவு மற்றும் நிர்மாணப் பணிகளின் அமுலாக்கல் போன்றன தொடர்பில் முறையான திட்டமொன்றினைத் தயாரித்திருக்கவில்லை.

(ஆ) 2009 ஆம் ஆண்டிலிருந்து 2.728 ஹெக்டேயர் பரப்பளவுள்ள 143 காணித் துண்டுகளை சுவீகரிப்பதற்கு எதிர்பார்க்கப்பட்டிருந்ததெனினும், 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செயற்திட்டத்தால் 0.3447 ஹெக்டேயர் பரப்பளவுள்ள 10 காணித்துண்டுகள் மாத்திரமே சுவீகரிக்கப்பட்டிருந்தன. நெடுஞ்சாலைகள் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சின் செயலாளரின் விளக்கத்தின் பிரகாரம் பாதிக்கப்பட்ட மக்களிடமிருந்தான எதிர்ப்புக்களே இக் காலதாமதத்திற்கு காரணமாக இருந்தது.

### 3.3 ஒப்பந்த நிர்வாகம்

கிடைக்கப்பெற்ற தகவல்களின் பிரகாரம், வீதி அபிவிருத்தி அதிகாரசயையானது இச் செயற்திட்டத்தின் கீழ் புதிய வீதியின் நிர்மாணம் காரணமாக இடம்பெயர்ந்த மக்களுக்கான வீடமைப்பு திட்டமொன்றினை வடிவமைப்பதற்காக 2008 இல் இலங்கை அரச பொறியியல் கூட்டுத்தாபனத்திற்கு ரூபா 1,175,300 ஆன தொகையினை செலுத்தியிருந்தது. எவ்வாறாயினும், 2014 திசெம்பர் 31 வரையும் வடிவமைப்பு பணிகள் பூர்த்தியாக்கப்பட்டிருக்கவில்லை. வீதி நிர்மாணப்பணிகள் கொழும்பு – ஹொரணை வீதியின் துட்டகைமுனு சந்தியுடன் துண்டிக்கப்பட்டதனையடுத்து செயற்திட்டத்தின் நோக்கெல்லை குறுகியமையால் கணக்காய்வின் போது இவ்வாறானதொரு வீடமைப்புத் திட்டத்தின் தேவைப்பாட்டினை உறுதிப்படுத்த இயலாதிருந்தது.